**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
**Tamil Study Centre Homebush Inc.**
PO Box 4032, Homebush, NSW 2140.
www.tsch.org.au
homebushtsch@gmail.com

## பேச்சுப் போட்டி 2025 ஆண்டு 1

அனைவருக்கும் வணக்கம்

### ஒழுக்கம்

“**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்**” என்றார் வள்ளுவர்.

நல்ல ஒழுக்கம் என்பது பெற்றோர், ஆசிரியர் சொற்கேட்டு நடத்தல், மூத்தோரை மதித்தல், இனிமையாகப் பேசுதல் போன்றன ஆகும். இவற்றைப் பேணி நடந்தால் நாம் தவறான பாதையில் செல்ல மாட்டோம். ஒருவர் எவ்வளவு படித்தாலும், பெரும் செல்வம் பெற்றாலும் ஒழுக்கம் இல்லாவிட்டால் மதிப்புடன் வாழமுடியாது.

ஆகவே நாம் நல்ல ஒழுக்கத்துடன் வாழப் பழகுவோம்.

நன்றி

வணக்கம்